# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

வழக்கு எண்.24622/விசாரணை/ 2009,

விசாரணை நாள் = 29–1–2010 (இராமநாதபுரம்)

| | | |
|---|---|---|
| முன்னிலை_ | = | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,<br>எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | = | திரு கு. காளிமுத்து, த/பெ குப்பையன்<br>புல்லந்தை, மாயாகுளம் அஞ்சல்<br>ஏர்வாடி வழி, இராமநாதபுரம் மாவட்டம்–623 515 |
| பொது அதிகார அமைப்பு | = | பொதுத் தகவல் அலுவலர்<br>தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்<br>(கும்பகோணம்) லிமிடெட்<br>27, புகைவண்டி நிலைய புதுச் சாலை<br>அஞ்சல் பெட்டி எண்.46, கும்பகோணம்–612 001 |

========

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு கு. காளிமுத்து வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பொதுத் தகவல் அலுவலர் திரு வி. சங்கர் வந்திருந்தார்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் 6.8.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் என்று முகவரியிட்டு, ஆறு இனங்களுக்குத் தகவல் கோரி விண்ணப்பித்திருந்தார். மனுதாரருக்கு 7.9.2009 அன்று தகவல்கள் அளிக்கப்பட்டன. தகவல்கள் முழுமையாக இல்லையென்று தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீடு செய்யாமல், சட்டப் பிரிவு 19(3)ன் கீழ் 30.9.2009 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3.இன்றைய விசாரணைக்கு மனுதாரர் வரவில்லை. விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் ஆணையத்திற்கு அனுப்பிய 30.9.2009 அன்று

மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டு கோரிய முதல் மற்றும் இரண்டாம் இனத்திற்கு, பேரூந்து கட்டணத்தின் அடிப்படையில்தான் கிலோ மீட்டர் தூரம் தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்து, கட்டண விவரம் மற்றும் கிலோ மீட்டர் விவரம் ஆகியவற்றின் நகலை இவ்வாணையத்தின் முன் காண்பித்தார். மனுதாரர் கோரிய மூன்றாவது இனமான கமுதியிலிருந்து ஏர்வாடி தர்உறா முடிய செல்லும் அரசு பேரூந்துகளிலும், காரைக்குடியிலிருந்து ஏர்வாடி தர்உறா முடிய செல்லும் அரசு பேரூந்துகளிலும், இராமநாதபுரம் புதிய பேரூந்து நிலையத்திலிருந்து ஏர்வாடி தர்உறா வரை எந்தெந்த ஊர் ஸ்டேஜ் என்பதற்கும், ஒவ்வொரு ஸ்டேஜ்க்கும் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதற்கும் முழுமையான தகவல்கள் அளிக்கப்படவில்லை.

4. இந்நிலையில், மனுதாரர் கோரிய மூன்று இனத்திற்கும், சரியான, முழுமையான அரசு ஆவணங்களில் உள்ளபடி, தகவல்களை, 10.2.2010க்குள் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்களின் நகலையும் இவ்வாணையத்திற்கு 17.2.2010க்கு இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.24622/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்**
**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்**
**(கும்பகோணம்) லிமிடெட்**
**27, புகைவண்டி நிலைய புதுச் சாலை**
**அஞ்சல் பெட்டி எண்.46, கும்பகோணம்–612 001**

**வழக்கு எண். 24622/2009**
**பெறுநர்**
**திரு கு. காளிமுத்து, த/பெ குப்பையன்**
**புல்லந்தை, மாயாகுளம் அஞ்சல்**
**ஏர்வாடி வழி, இராமநாதபுரம் மாவட்டம்–623 515**